## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ே◌ஹமநாதன் | அசல் வழக்கு எண். | 51/2015 |
| த/பெ. | - | | வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

12.01.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் புதுச்சேரியில் காவல்துறை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் 20.02.2000 - ல் பிறந்தேன். வீரப்பன் எனக்கு என்ன உறவுதுறை என்றால் என்னுடைய தாத்தா கோபால் என்பவரின் தந்தை. எனது தாத்தா கோபால் மற்றும் எனது தாத்தாவின் தந்தை வீரப்பன் ஆகியோர்களை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். என்னுடைய சிறிய தாத்தா கந்தசாமி என்பவரை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் எனக்கு நான்கு வயது இருக்கும்பொழுது அவர் இறந்துவிட்டார், எனக்கு சிறிய வயது என்பதால் சரியாக நினைவில்லை.

2. எனது தந்தையின் உடன்பிறந்த சகோதரர் சந்திரவேல் மற்றும் என் தந்தையின் உடன்பிறந்த சகோதரிகள் ராஜகுமாரி, அஞ்சா என்றால் சரிதான். என்னுடைய சிறிய தாத்தாவான கந்தசாமி என்பவரின் ஒரே மகள் முதல் பிரதிவாதி அங்கையர்கன்னி என்றால் சரிதான். என் தாத்தா இறந்த வருடம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, 13.12.1986-ல் இறந்தார். அவர் இறந்தது எனக்கு நேரடையாக தெரியாது என்றால் இறப்பு சான்றிதழ் மூலம் தெரிந்துகொண்டேன். கந்தசாமி எப்போது இறந்தார் என்றால் 29.02.2004-ல் இறந்தார்.

3. வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தாவின் அப்பாவான வீரப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் வீரப்பன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வீரப்பன் இறந்த

பின்பு அனைத்து சொத்துக்களையும் வீரப்பனின் வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல, அவரது வாரிசுகளான கோபால் மற்றும் கந்தசாமி வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு அனுபவம் செய்து வந்தனர். கோபால் மற்றும் கந்தசாமி ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு அனுபவத்தாக என் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் என் பிரமாண பத்திரிக்கையில் கோபால் மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக குறிப்பிட்டு சொல்லியுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா கோபால் என்பவரும் சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கோபால் இறந்த பின்பு வழக்கு சொத்துக்களை கோபாலின் வாரிசுகள் மற்றும் கந்தசாமியின் வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல, என் அப்பா, என் பெரியப்பா, என் சின்ன தாத்தா கந்தசாமி ஆகியோர்கள் தனித்தனியாக அவர்களது பங்கினை அனுபவம் செய்து வந்தனர்.

4. கோபால் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டதால் கோபாலின் அனைத்து வாரிசுகளுக்கும் வழக்கு சொத்தில் உரிமை உண்டு என்றால் சரியல்ல, பெண் வாரிசுகளான அஞ்சா மற்றும் ராஜகுமாரி ஆகியோர்கள் சொத்தில் பங்கு வேண்டாம் என்றும் சொல்லிவிட்டதால் என் பெரியப்பா மற்றும் என் அப்பாவான 1ம் வாதி மட்டும் அனுபவம் செய்து வந்தனர். என் அத்தைகளான அஞ்சா மற்றும் ராஜகுமாரி ஆகியோர்கள் வழக்கு சொத்தில் உரிமை வேண்டாம் என்று சொல்லியதாக என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், அவர்கள் கேட்காததால் நான் சொல்லவில்லை. ராஜகுமாரி மற்றும் அஞ்சா ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் எங்களுக்கு மட்டுமே பரிகாரம் கேட்டுள்ளதால் சேர்க்கவில்லை.

5. என் சிறிய தாத்தா கந்தசாமி இறக்கும் வரை அவரும் அவரது மகளான 1ம் பிரதிவாதியும் வழக்கு சொத்துக்களை அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல, கந்தசாமி மட்டும் அனுபவம் செய்து வந்தார். கந்தசாமி இறக்கும் போது எனக்கு நான்கு வயது என்பதால் எனக்கு சரியாக விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல,

என் பெற்றோர்கள் சொல்லி தெரிந்துக்கொண்டேன். வா.சா.ஆ.13 ஆவணத்தை பற்றி எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.13 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சிவசுப்ரமணியன் என்பவர் கையெழுத்து செய்துள்ளார், இன்னொரு சாட்சியின் கையெழுத்து பார்த்தபோது சுந்தரவேலு என்று கையெழுத்து செய்தது போல் உள்ளது, எழுத்து சரியாக எழுததால் எனக்கு வார்த்தைகள் புரியவில்லை. வா.சா.ஆ.13 உயிலான மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமும் எவ்வித உரிமையும் இல்லாமல் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6. 1-ம் பிரதிவாதி பாகம் கேட்டு அனுப்பிய அறிவிப்பு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 2014 ல் அனுப்பப்பட்டது. 1-ம் பிரதிவாதியின் அனுமதியுடன் தான் எனது அப்பா மற்றும் எனது பெரியப்பா சந்திரவேலு வழக்கு சொத்தை அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

சாட்சி முடித்து வைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.01.21 00:57:14 +0530

District Munsif
Vanur.